2004 ஜூலை 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 79, திரு. பி.கே.டி. நடராஜன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

79—

கால்நடை மருத்துவமனை

***20800—திரு. பி.கே.டி. நடராஜன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில், கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2,294 மட்டுமே. அதன் அருகில், 2 கிலோ மீட்டர் தொலைவில் பித்தனாப்பட்டி மற்றும் முத்தழகுப்பட்டி கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தற்போது துறையில் செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்கள் மட்டுமே, கால்நடை மருந்தகங்களாகவும், மருத்துவமனைகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. எனவே பொன்னுமாந்துறை கிராமத்தில், தற்போது, எந்தவொரு கால்நடை நிலையமும் செயல்படாத நிலையில் அங்கு நேரடியாக ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்க வாய்ப்பில்லை.

(ஆ) எழாது.

திரு. பி.கே.டி. நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஆத்தூர் சட்டமன்றத் தொகுதி, பொன்னுமாந்துறை கிராமத்திற்கு அருகில் சின்ன பொன்னுமாந்துறை, காமாட்சிபுரம், குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி, இராயர்பட்டி, டி. புதூர், மல்லேந்திரபுரம், வண்ணாம்புதூர், பள்ளப்பட்டி போன்ற

அனைத்துக் கிராமங்களையும் சேர்த்து, 10,000 கால்நடைகள் வரை உள்ளன. இந்தப் பகுதியில், பெரும்பாலும் கால்நடைகளின் மூலம் கிடைக்கும் வருவாயை வைத்து பிழைப்பு நடத்தி வருகின்றனர். இவர்கள் கால்நடைகளை வைத்தியம் செய்வதற்கு, 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பித்தனாப்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது; மற்றும் 7 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள முத்தழகுப்பட்டி கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டியுள்ளது. கால்நடைகளை நல்லமுறையிலே பராமரிக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, வருகின்ற நிதியாண்டிலாவது பொன்னுமாந்துறை கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையமாவது அமைத்துத் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதியிலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே, கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 10,000—க்கு மேல் இருப்பின், அங்கு கால்நடை மருந்தகம் அமைத்துத் தரப்படுகிறது. கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமாயின், அப்பகுதிக்கும், அதன் அருகில் செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம், 8 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். கால்நடை மருத்துவமனை தொடங்கப்பட வேண்டுமானால், அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை, நாற்பதுக்கும் கூடுதலாக இருக்க வேண்டும். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் பகுதிக்கு உட்பட்ட ரெட்டியார்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், பொன்னுமாந்துறை கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை, 2,294 ஆகும். இதன் அருகில், 2 கிலோ மீட்டர் தூரத்தில் பித்தனாப்பட்டி மற்றும் முத்தழகுப்பட்டி கால்நடை கிளை நிலையங்களும் 5 கிலோ மீட்டர் தொலைவில், குந்தலம்பட்டியில் கால்நடை மருந்தகமும் உள்ளன. திண்டுக்கல் மாவட்டம், பொன்னுமாந்துறை கிராமத்தில், கால்நடை மருந்தகம் அமைப்பது குறித்து, அக்கிராமமும் மற்றும் அதைச் சுற்றியுள்ள சின்ன பொன்னுமாந்துறை, குட்டியபட்டி, குருவப்பநாயக்கன்பட்டி, இராயர்பட்டி, பள்ளப்பட்டி, டி. புதூர், வண்ணாம்புதூர் ஆகிய இந்த கிராமங்களிலெல்லாம் சேர்த்து உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை,

2004 ஜூலை 29]

மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் திரு. பி.கே.டி. நடராஜன் அவர்கள் கூறியதைப்போல, 10,000—க்கு மேல் இருக்குமானால், வரும் நிதியாண்டில், அரசின் நிதிநிலைமைக்கேற்ப, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணை பெற்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80, திருமதி ஆர். சரோஜா, மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

முற்பகல் 11–15

80—

பச்சைமலைப் பகுதியை வளப்படுத்துதல்

***30222—திருமதி ஆர். சரோஜா:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதி, பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த எவ்வளவு நிதியை அரசு வழங்கியுள்ளது?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க பச்சைமலைப் பகுதியை வளப்படுத்த இதுவரை ரூ.114.69 இலட்சம் வழங்கப்பட்டு, பல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நடப்பாண்டில் மேலும் சில பணிகள் நடைபெற உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி ஆர். சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் ரூ.114.69 இலட்சத்தில் பல பணிகள் நடைபெற்றுள்ளன என்று கூறினார். எந்தெந்தப் பகுதியில், என்னென்ன பணிகள் நடைபெற்றுள்ளன என்பதை அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.